# அருப்புக்கோட்டை நகராட்சி

**சார்வரி ஆண்டு சித்திரை மாதம் நாள் : 04.05.2021 செவ்வாய்க்கிழமை மாலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– S.முகம்மது சாகுல் ஹமீது M.E.,தனி அலுவலர்**

பொருள் 1: நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் மார்ச் மற்றும் ஏப்ரல் – 2021 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:–**

பதிவு செய்யப்படுகிறது.

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1212**

பொருள் 2: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனஙகளுக்கு 2021–2024ம் ஆண்டிற்கான மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.02.2021 அன்று நடைபெற்றது. மேற்படி தினத்தன்று நடைபெற்ற மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை வீடியோ கவரேஜ் செய்த வகையில் செலவினத்தொகை ரூ.4000/–ஐ பாலாஜி டிஜிட்டல்ஸ் நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.10714/2014/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1213**

பொருள் 3 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனஙகளுக்கு 2021–2024ம் ஆண்டிற்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறுவதை எதிர்த்து திரு.ராம்குமார் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் 2113/2021க்கு எதிர்வாதுரை தாக்கல் செய்த வகையில் செலவினத்தொகை ரூ.9000/–ஐ திரு.என்.திலீப்குமார், வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.10714/2014/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1214**

பொருள் 4 : அருப்புக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 28.02.2021 அன்று ஓய்வுபெற்ற திரு.அழகிரி, த/பெ.மூக்கன் அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி அரசு மானியத் தொகை ரூ.10000/– வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.512/2021/பி3

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1215**

பொருள் 5 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனஙகளுக்கு 2021–2024ம் ஆண்டிற்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறுவதை எதிர்த்து திரு.வி.கே.அர்ச்சுனன் மற்றும் திரு.விஜய் என்பவர்களால் சென்னை உயர்நீதிமன்ற

மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் 3369/2021 மற்றும் 3375/2021க்கு எதிர்வாதுரை தாக்கல் செய்த வகையில் செலவினத்தொகை வழக்கு ஒன்றிற்கு தலா ரூ.9000/– வீதம் இரண்டு வழக்கிற்கு ரூ.18000/–ஐ திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.10714/2014/அ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1216</u>

பொருள் 6 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்கள்: 04, 08, 09, 11, 13, 15, 23 மற்றும் 25க்கான குத்தகை உரிமதாரர்கள் முறையே V.ரத்தினவேலு, K.மிதுன்கண்ணன், R.ரவிகணேஷ், A.ரபீக்மைதீன், M.குல்பத்நிஷா, SRV சந்திரகுமார், பிரேமா மற்றும் A.சேக் அப்துல்லா ஆகியோரால் கோவிட்–19 பொது ஊரடஙகு காலஙகளான ஏப்ரல் 2020 முதல் செப்டம்பர் 2020 வரை கேட்பாக எழுப்பி வரப்பெற்ற மாத வாடகையை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்கள் : WP(MD) No.:5085/2021, WP(MD) No.:5094–2021, WP(MD) No:5089/2021, WP(MD No:5098/2021, WP(MD No:5095/2021, WP(MD No:5100/2021, WP(MD No:5104/2021 மற்றும் WP (MD)No:5106/2021 ஆகியவற்றிற்கு நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும் மற்றும் வாதாடுவதற்கும் செலவினத் தொகை வழக்கு ஒன்றிற்கு ரூ.9,000/–வீதம் தலா 8 வழக்கிற்கு மொத்தம் ரூ.72,000/– வழஙகவும் மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள உணவு விடுதிக்கு 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் கண்காணிப்பு குழுக்களால் புதிதாக உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையை ரத்து செய்யக் கோரி மேற்படி கடையின் குத்தகை உரிமதாரர் திரு.செந்தில் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் WP(MD)No:6220/2021க்கும் நகராட்சி சார்பாக நீதிமன்றத்தல் ஆஜராவதற்கும் மற்றும் வாதாடுவதற்கும் செலவினத் தொகை ரூ.9,000/– வழஙகவும் திரு.N.திலீப்குமார், வழக்கறிஞர் அவர்கள் பட்டியலை சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்படி வழக்கு ஒன்றிற்கு ரூ.9,000/– வீதம் 9 எண்ணம் வழக்கிற்கும் மொத்தம் ரூ.81,000/–ஐ திரு.N.திலீப்குமார், வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க எண் 11271/2018/அ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1217</u>

பொருள் 7 : அருப்புக்கோட்டை நகராட்சியில் கேஙகூலி பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.எல்.கருப்பசாமி மற்றும் திரு.எஸ்.வாசு என்பவர்கள் தஙகள் பணியிடத்தில் தேர்வு நிலையினை முன் தேதியிட்டு வழஙகியும் மற்றும் அதற்கான ஊதியத்தினை நிர்ணயம் செய்து உத்தரவு வழஙக கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் W&(MD) No:4960/2021 மற்றும் M & (MD) No: 5891 மூலம் வழக்கு தொடர்ந்தனர். மேற்படி வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக திரு.என்.திலிப்குமார், வழக்கறிஞர் வாதிட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெற்று அதன் உத்தரவு வழஙகியுள்ளார். எனவே மேற்படி இரண்டு வழக்குகளுக்கும் நகராட்சி சார்பாக வாதாடியதற்கு வழக்கு கட்டணமாக ரூ.18000/–ஐ (9000+9000) திரு.என்.திலிப்குமார், வழக்கறிஞருக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2062/2021/சி1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1218</u>

பொருள் 8 : அருப்புக்கோட்டை நகராட்சி சர்வே எண்கள் 284/9 பி, 10பி மற்றும் 11ல் 2.08 ஏக்கர் (8415.68 சமீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78, 172 H & UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்தக்கோரி திரு.மாணிக்கசங்கர் மற்றும் M.ரமேஷ்பாபு என்பவர்கள் விண்ணப்பித்ததன் பேரில் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்களால் ம.வ(மு)/ந.ஊ.து.இ(விருமா) எண் 05/2021 நாள் 01.03.2021ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள பூங்கா மற்றும் சாலைகளை அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 209/2021 நாள் 18.01.2021ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்கள் வழியாக நகராட்சிக்கு தானமாக மனுதாரரால் வழஙகப்பட்டள்ளது. மேற்படி சாலை மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1566/2021/எப்1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1219</u>

பொருள் 9 : அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள் 03.07.2007ன் படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விபரப்படி உள்ள கடைகளுக்கு 31.03.2021 உடன் மூன்றாண்டு காலம் உரிமம் முடிவடைவதால் ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பிலுருந்து 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு உரிமத்தை புதுப்பித்து வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | உரிமம் முடிவடையும் தேதி | ஏற்கனவே உள்ள மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை (15 சதவீதம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் அருகில் உள்ள அறை | திரு.கார்த்தி கேயன் | 30.03.2021 | 748 | 112 | 860 |
| 2 | புதிய பேருந்து நிலைய கடை எண் 18 | திரு.அப்துல் காதர் | 31.03.2021 | 4666 | 700 | 5366 |
| 3 | பழைய பேருந்து நிலைய வெளிப்பக்க கடை எண் 1 | திரு.வடிவேல்முருகன் | 31.03.2021 | 8455 | 1268 | 9723 |
| 4 | அண்ணாசிலை கடை எண் 4 | திரு.சக்திவேல் | 31.03.2021 | 1380 | 207 | 1587 |
| 5 | அண்ணாசிலை கடை எண் 5 | திரு.சக்திவேல் | 31.03.2021 | 1380 | 207 | 1587 |
| 6 | திருச்சுழி ரோடு மேலரதவீதி சந்திப்பு பெட்டிக்கடை | திரு.K.P.பாஸ்கரன் | 31.03.2021 | 446 | 67 | 513 |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.11271/2018/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1220**

பொருள் 10 : அருப்புக்கோட்டை நகரம் வார்டு G, பிளாக் 11 நகரம் புல எண் 24 விஸ்தீரணம் ஹெக்டர் 1–10–4 பரப்பளவு உள்ள இடத்தினை என்னுடைய அனுமதியில்லாமலும் எனது கணவர் அனுமதியில்லாமலும் மேற்படி இடத்தினை பட்டா மாற்றம் அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அவர்களால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)No8413/2021 வழக்குத்தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளர் அவர்களை நான்காம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அருப்புக்கோட்டை அவர்களையும் பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு.N.திலீப்குமார் அவர்களை ஆஜராவதற்கும் மற்றும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6034/2021/எப்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1221**

பொருள் 11 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண்கள் : 8 மற்றும் 10ஐ சம்பந்தப்பட்ட கடை உரிமதாரர்களான திருமதி.லலிதாகௌரி மற்றும் திரு.நித்தியானந்தம் ஆகியோர் கடையை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் நகராட்சி வசம் கடையை ஒப்படைப்பு செய்து விட்டதை ஏற்று ஏற்கனவே மன்ற அனுமதி பெற்று மேற்படி கடைகள் பொது ஏல நடவடிக்கையில் தற்போது உள்ளது. மேலும் மேற்படி திருமதி லலிதாகௌரி மற்றும் திரு.நித்தியானந்தம் ஆகியோர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கேட்புத் தொகையை தங்களது வைப்புத்தொகையில் இருந்து ஈடுசெய்து கொள்ளும்படியும், ஈடு செய்ததுபோக மீதத்தொகையை வழங்கும்படியும் விண்ணப்பித்துள்ளனர். மேலும் மேற்படி கடைகளில் உள்ள மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருப்பதால், புதிய மின் இணைப்பு பெறுவதற்குரிய உத்தேச கட்டணத் தொகை கடை ஒன்றிற்கு ரூ.6000/–வீதம் தலா இரு கடைகளுக்கும் ரூ.12,000/– போக மீதத் தொகையை அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 8ன் உரிமதாரர் திருமதி லலிதாகௌரி என்பவரது வைப்புத்தொகை ரூ.50,000/–ல் அன்னார் 2018–2019ம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய கேட்புத் தொகை ரூ.26136/– மற்றும் புதிய மின் இணைப்பு பெறுவதற்கான மின் இணைப்பு உத்தேச கட்டணத் தொகை ரூ.6000/–ஆக மொத்தம் ரூ.32,316/– போக மீத்தொகை ரூ.17,864/– அன்னாருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 10ன் உரிமதாரர் திரு நித்தியானந்தம் என்பவரது வைப்புத்தொகை ரூ.50,000/–ல் அன்னார் 2019–2020 செப்டம்பர் வரை செலுத்த வேண்டிய கேட்புத்தொகை ரூ.23,881/– மற்றும் புதிய மின் இணைப்பு பெறுவதற்கான உத்தேச மின் இணைப்பு கட்டணத் தொகை ரூ.6000/–ஆக மொத்தம் ரூ.29,881/– போக மீதத்தொகை ரூ.20,119/–ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.5138/2012/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1222**

பொருள் 12 : அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28369/2018/ஜே3, நாள் 04.12.2018ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் 06.05.2020ம் தேதிய செயல்முறைகளின்படி ஒரு வருட காலத்திற்கு உத்தரவு வழஙகப்பட்டு, ஒரு வருட காலம் (06.05.2020 முதல் 05.05.2021 வரை ) முடிவடைந்த தருவாயில் மீளவும் M/s.Malar Clean and Green Pvt Ltd., Sankarankovil நிறுவனம் மீண்டும் பார்த்துவர விருப்பம் தெரிவித்துள்ளதாலும் மேற்படி நிறுவனம் நல்ல முறையில் பணி செய்து வருவதாக துப்புரவு ஆய்வாளர்களால் 21.04.2021ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு மீண்டும் கால நீட்டிப்பு செய்ய சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாலும் கொரோனா நோய் தடுப்பு அத்தியாவசியம் கருதி அதே நிறுவனத்திற்கு தனியார் துப்புரவு பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவுத்தொகைக்கு பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.4734/2015/எச்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1223**

பொருள் 13 : அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, கொரோனா நோய் வைரஸ் பரவாவண்ணம் தடுக்கும் வகையில் நகர் பஜார் பகுதி, பேருந்து நிலையஙகள் மற்றும் நோய் தாக்கம் உள்ள பகுதிகளில் தொடர்ந்து கிருமி நாசினி தெழிக்க வேண்டி உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் 8000 லிட்டர் வாஙகவும் அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.4.50 லட்சத்திற்கு ஆணையரின் அனுமதிக்கும் மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6060/2021/எச்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1224**

பொருள் 14 : அருப்புக்கோட்டை நகராட்சியின் கீழ் பணிபுரியும் அம்மா உணவகம் மற்றும் (DBC) கொசு ஒழிப்பு பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்த ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை உள்ள காலஙகளுக்கு EPF (Emloyee Provident Fund) தொகையை Online ல் பதிவேற்றம் செய்து J.K.S.Consultancy நிறுவனம் மூலம் இரசீது பெறவும் இனிவரும் காலஙகளுக்கு ஆகும் செலவுக்கட்டணம் J.K.S.Consultancy நிறுவனத்திற்கு வழஙகவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**அலுவலக குறிப்பு :—**

பணியாளர் சேமநலநிதி தொடர்பாக ஏற்கனவே இந்நகராட்சியால் தாக்கல் செய்யப்பட்டுவரும் ஆலோசகர் J.K.S.Consultancy, அவர்கள் மூலம் இப்பணியை செய்யவும் அதற்கான கட்டணத்தை மேற்படி நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி மன்ற முன்அனுமதி பெற்று வழஙகியதையும் மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.123/2020/பி2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1225**

பொருள் 15 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள உணவு விடுதிக்கு புதிதாக வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து திரு.செந்தில் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் 8702/2021க்கு நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும் மற்றும் வாதாடுவதற்குமான செலவினத்தொகை ரூ.9000/—ஐ திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறத.

<u>அலுவலக குறிப்பு :—</u>

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.73/2020/அ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1226</u>

பொருள் 16 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள அடிகுழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு Stand இல்லாததால் மேற்கண்ட பொருள் 40 எண்ணம் இருப்பு வாஙகி வைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.1,61,448/—க்கு அரசு அனுமதி பெற்ற நிறுவனமான M/s.Flowin Industriesன் மூலம் வாஙகுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண்.4048/2021/இ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1227</u>

பொருள் 17 : அருப்புக்கோட்டை நகராட்சி 2019 – 2020ம் ஆண்டிற்கு ஆண்டு கணக்குகள் தயார் செய்தல் மற்றும் கணினியில் நேர் செய்து தணிக்கை முடிந்தமைக்கு ரூ.35,000/—ஐ திரு.V.சீனிவாசன் (CA) அவர்களுக்கு வழஙக மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :—</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.31/2015/அ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1228</u>

பொருள் 18 : அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் காலியாக உள்ள துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடஙகள் 6 மாதத்திற்கு மேலாக காலியிடமாக இருந்து வருவதால் அப்பணியிடஙகளை நிரப்பிக்கொள்ள காலநீட்டிப்பு வழஙக கோரியும் தகுதி வாய்ந்த தூய்மை பணியாளர்களை பதவி உயர்வு மூலம் நிரப்பி கொள்ளவும் அனுமதி கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 18.02.2019 மற்றும் 07.01.2021 ஆகிய தேதிகளில் கடிதஙகள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதஙகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களிடமிருந்து பதிலறிக்கை இதுநாள் வரையிலும் பெறப்படவில்லை. இருப்பினும் தற்போது பொது சுகாதாரப்பிரிவு கெரோனா நோய் மற்றும் டெஙகு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக மேற்படி துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்தில் தகுதி வாய்ந்த தூய்மை பணியாளரை பதவி உயர்வு மூலம் பணி நியமனம் செய்ய துப்புரவு ஆய்வாளர் மற்றும் நகர் நல அலுவலர் (பொறுப்பு) அன்னார் தனது 24.12.2020 தேதிய அறிக்கையில் கோரியுள்ளார், மேலும் இந்நகராட்சி ஆணையாளர் தனது 27.01.221 ம் தேதிய குறிப்பில் பணியிடை மரணமடைந்த திரு.பி.பாண்டிக்குமார், துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்தில் தகுதி வாய்ந்த தூய்மை பணியாளரை பதவி உயர்வின் மூலம் பணிநியமனம் செய்ய நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார். இந்நகராட்சியின் ஊதிய செலவினம் 49 சதவீதத்திற்கு மேலாக இருந்து வருகிறது. மேலும் 04.08.2020 அன்று பணியிடை மரணமடைந்த திரு.பி.பாண்டிக்குமார், துப்புரவு பணிமேற்பார்வையாளர் பணியிடம்

தொடர்ந்து 6 மாதத்திற்கு மேலாக காலியிடமாக இருந்து வருவதால் மேற்படி பணியிடத்தில் பொது சுகாதார கொரோனா நோய் தடுப்பு பணிக்கான அவசர அவசியம் கருதி தகுதி வாய்ந்த துாய்மை பணியாளரை முன்னுரிமை பட்டியலின் பணிக்கான அவசர அவசியம் கருதி தகுதி வாய்ந்த துாய்மை பணியாளரை முன்னுரிமை பட்டியலின் அடிப்படையில் பதிவி உயர்வின் மூலம் பணி நியமனம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.925/2007/சி1

<u>**தீர்மானம் :**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**தீர்மான எண்.1229**</u>

**பொருள் 19 :** அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் இருக்கும் நகர்மன்ற அறையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் மற்றும் அருப்புக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கொரானா பெருந்தொற்று நோய் சம்பந்தமாக அடிக்கடி அரசு அதிகாரிகளுடன் கூட்டம் நடத்துவதால் மேற்கண்ட அறையில் நாற்காலிகள் பயன்படுத்தாத நிலையில் உள்ளதாலும், மேலும் Audio mic (inbuilt) வயரிங பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 43 எண்ணம் நாற்காலி மற்றும் Audio mic, Electrical Wiring Arrangement மேற்கொள்ளவும், AC பொருத்தவும் மேலும் அலுவலக வளாகத்தில் CC TV Camara பொருத்தவும் உத்தேச மதிப்பீடு ரூ.25.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7087/2021/இ1

<u>**தீர்மானம் :**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**தீர்மான எண்.1230**</u>

**பொருள் 20 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் வரிவசூல் மையங்கள், பொறியியல் பிரிவு மற்றும் பொது பிரிவில் உள்ள பழைய கணினிகள் அடிக்கடி பழுதாகி பணிகள் மேற்கொள்ள சிரமமாக உள்ளது. எனவே புதியதாக 10 எண்ணம் கணினிகள் வேண்டும் எனவும், திருச்சுழி ரோடு நீர்தேக்க தொட்டியில் உள்ள UPS பழுதாகி உள்ளதால் புதிதாக 2 எண்ணம் 1 KVA Online UPS வேண்டும் எனவும், பிறப்பு, இறப்பு பதிவு சான்றிதழ்கள் பற்றிய அறிக்கைகள் தயாரிக்க ஜெராக்ஸ் இயந்திரம் தேவைப்படுவதாக உதவி கணினி திட்ட அமைப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ளார். அதன்படி மேற்கண்ட பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்ககொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7085/2021/இ1

<u>**தீர்மானம் :**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**தீர்மான எண்.1231**</u>

**பொருள் 21 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பொது மயானத்தில் கொரோனா பெருந்தொற்று காரணமாக இறப்பு ஏற்பட்டு வரும் சடலஙகளை காலதாமதமின்றி எரியூட்டுவதற்கு ஏதுவாக ஜென்செட் அமைக்கவும், மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுகூட்டத்தில் மயானஙகளில் CCTV Camara பொருத்தவும் அறிவுறுத்தியுள்ளதின் அடிப்படையிலும், மேலும் இரவு நேரஙகளிலும் சடலஙகள் வருவதால் வெளிச்சத்திற்கு lighting வசதி செய்ய Pole அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை கொரோனா பெருந்தொற்றுக்கு வரப்பெற்றுள்ள நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7086/2021/இ1

**தீர்மானம் :**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.1232**

**பொருள் 22 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனியாக பிரித்து MCC மூலம் கலவை உரம் தயாரிக்கப்படுவதை அந்தந்த MCC ல் போட்டு வைப்பதற்கு டம்பர்பின்கள் –12 மற்றும் பாதிக்கப்படக்கூடிய (Vulnerable point) ல் 6 டம்பர் பின்கள் தேவைப்படுவதாக சுகாதார பிரிவு ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணஙக டம்பர் பின்கள் 30 எண்ணம் வாஙகுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.22.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7084/2021/இ1

**தீர்மானம் :**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.1233**

**பொருள் 23 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 8 வசந்தம் நகர் பகுதியானது விரிவாக்கப்பகுதியாக உள்ளது. மேற்கண்ட பகுதியில் சாலை குண்டும் குழியுமாக பொதுமக்கள் செல்வதற்கு மிகவும் இடையூறாக உள்ளதால் அதனை சரிசெய்து புதிதாக தார்சாலை அமைக்க கேட்டுக்கொண்டதற்கு இணஙக அவ்விடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பகுதியில் சாலை தார்சாலையாக அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.20.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7097/2021/இ1

**தீர்மானம் :**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.1234**

**பொருள் 24 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 8 மீனாம்பிகை நகர் பகுதி, விரிவாக்க பகுதி மேற்கண்ட பகுதியில் உள்ள சாலை மழைக்காலஙகளில் தண்ணீர் தேஙகி சகதியாக போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதால் அப்பகுதிமக்கள் புதிதாக சாலை அமைக்க கேட்டுக்கொண்டதற்கு இணஙக அவ்விடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பகுதியில் புதிதாக தார்சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.20.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7025/2021/இ1

**தீர்மானம் :**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.1235**

**பொருள் 25 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 9 தேவாடெக்ஸ் பகுதியில் தார்சாலை (காலனி மற்றும் பகுதி) மிகவும் சேதமடைந்து மழைக்காலஙகளில் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் அப்பகுதிமக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணஙக அவ்விடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட தெருவில் புதிதாக தார்சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.25.00 இலட்சம் ஆகும் மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7089/2021/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.1236</u>**

**பொருள் 26 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 9 தேவாடெக்ஸ் காலனி (பாரதிமஹால் எதிர்றம்) உள்ள சாலை மண் சாலையாக உள்ளது. அப்பகுதி மக்கள் புதிதாக சாலை அமைத்துத்தர கேட்டுக்கொண்டதற்கு இணஙக அவ்விடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட தெருவில் புதிதாக தார் சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.25.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7088/2021/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.1237</u>**